**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**ஜூலை – ஆகஸ்டு 2022**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. இராமலிங்க அடிகள் எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்ட நூலின் பெயர் என்ன?
2. மாந்தருக்கு இரு கண்களாய் விளங்குவது எது?
3. கண்ணதாசன் நடத்திய இதழ் எது?
4. படிக்கப் படிக்க ஊறுவது எது?
5. ஒருவர் தன்னிடம் கொண்டு இருப்பது எது?
6. மக்கள் பட்டறிவால் பெற்ற கருத்துக்களைச் சுருக்கமாக கூற பயன்படுத்துவது எது?
7. வண்டினத்திற்கு எத்தனை கால்கள்?
8. முதன் முதலில் தோன்றிய பரணி எது?
9. ஒடுங்குதல் என்பதன் பொருள் யாது?
10. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தவர் யார்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. இறைவன் காட்சி தருவதை விவரி?
2. அறிவின் இலக்கணம் யாது?
3. நாலடியாரைப் பற்றிக் கூறப்படும் பழமொழி யாது?
4. அன்பின் ஆழத்தையும் உயரத்தையும் எதனைக் கொண்டு குகன் உணர்த்துகிறான்?
5. சொல்லின் வகைகள் யாவை?
6. இரண்டாம் குலோத்துங்கன் தில்லை கோவிலுக்கு என்ன செய்தான்?
7. சிவன் அசுரர்களின் என்னென்ன கோட்டைகளை அழித்தார்?
8. பரணி என்பது யார் மீது பாடப்பெறும்?
9. பழிக்கு உழல்பவர் யார்?
10. உலகத்தில் எவை அழிய வேண்டும்?
11. தேவாரம் பாடிய சமயகுரவர்கள் மூவரை குறிப்பிடுக.

12. திரு.வி.க எழுதிய நூல்களில் மூன்றினை எழுதுக.
13. தாமரைக்குளம் ஓவியம் குறித்து எழுதுக.
14. எனக்கு தொடர்வண்டி என்பது என்ன?
15. தாமரை என்பது இது தா + மரை எனப் பிரித்துப் பொருள் தந்தால் எவ்வகை மொழியில் அடங்கும்?

**பகுதி – இ**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?
2. வழுவமைதி என்றால் என்ன? உதாரணம் தருக.
3. ஐவகை நிலங்களை எழுதி அவை சார்ந்த இடங்களையும் குறிப்பிடுக.
4. திருக்குற்றாலக் குறவஞ்சி சிறுகுறிப்பு வரைக.
5. முரசு என்ற பாடல் வழியே பாரதி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
6. புதுக்கவிதை என்றால் என்ன? உனக்குப் பிடித்த இரண்டு புதுக்கவிதை வாதிகளின் பெயர்கள் எழுது.
7. தாலாட்டு என்றால் என்ன?
8. பெரியார் ஆற்றிய சமூகப் பணிகள் பற்றி எழுதுக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. நாட்டு கொடியின் வண்ணங்களை பற்றியும் அவற்றின் பொருளையும் தொகுத்து எழுதுக.
2. தொடர்வண்டி என்ற தலைப்பில் உன் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
3. சார்பெழுத்தின் வகைகள் குறித்து விளக்குக.

**பகுதி – உ**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. நிரல்நிறை அணி , பின்வரு நிலையணி , ஏகதேச உருவக அணி ஆகியவற்றிற்குத் தகுந்த உதாரணம் எழுதி அணிகளை விளக்குக.

2. வள்ளல் பாரி பற்றியும், பறம்பு மலையின் இயற்கை வளத்தை பற்றியும் ஒரு கட்டுரை வரைக.

*****